முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளான

# ஜூன் - 3 - செம்மொழி நாளாகக் கொண்டாடப்படும்!

## தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 27-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளான ஜூன் 3- செம்மொழி நாளாகக் கொண்டாடப்படும் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை மானியக் கோரிக்கையில் பதிலுரை வழங்குகையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்.**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பதிலுரை வருமாறு:

'எனது செங்கோலை யாரும் பறிக்கலாம், ஆனால் என் எழுதுகோலை யாராலும் பறிக்க முடியாது' என்று எழுத்தையே முழு மூச்சாகக் கொண்டு இறுதிவரை வாழ்ந்த பெருமை முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுக்கு மட்டுமே உண்டு.

தனது 14-வது வயதில் கையெழுத்துப் பத்திரிகை தொடங்கி, 95-வது வயது வரை தமிழ்நாட்டின் தலையெழுத்தைத் தீர்மானித்த பத்திரிகையாளர், எங்கள் வழிகாட்டி தலைவர் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொள்கையில் பெரியாராய், அரவணைப்பில் அண்ணாவாய், திட்டங்களைத் தீட்டுவதில் கலைஞராய், அடித்தட்டு மக்களுக்கு அயராது உழைப்பதில் அம்பேத்கராய், ஏழைகளுக்காகவே எப்போதும் சிந்திக்கும் காமராஜராய், இந்த ஐவரையும் உருவாய் கொண்டு தாங்கி நிற்கும் திராவிட மாடல் அரசின் தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களை நான் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) . . .

எங்களைப் பொறுத்தவரையில் கலைஞர் இன்னும் மறையவில்லை. முதலமைச்சர் அவர்கள் உருவிலேதான் வாழ்கிறார். முதலமைச்சர் அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு இன்னொரு கலைஞர் கிடைத்ததுபோல, இன்னொரு தளபதியும் கிடைத்துள்ளார். அவர்தான் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிரிகளை விரட்ட நாடாளுமன்றத் தேர்தலில் 40-க்கும் 40 தொகுதிகளிலும் வெற்றிக்கு வித்திட்ட வெற்றித் தளபதிக்கு என் வணக்கம். நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் உள்ளிட்ட அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற மாபெரும் இயக்கத்திலும், கழக அரசிலும் பல பொறுப்புகளைத் தந்து, இரண்டாவது முறையாக அமைச்சராக்கி, திராவிட மாடல் அரசில் நான்காவது முறையாக இம்மாமன்றத்தில் செய்தித் துறை மானியக் கோரிக்கையை அளிப்பதற்கு வாய்ப்பு வழங்கியதற்கு, மீண்டும் ஒருமுறை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், கூடுதலாக இந்த ஆண்டு, முதல்முறையாக நம்முடைய தாய் மொழியான தமிழ் வளர்ச்சித் துறைக்கு மானியக் கோரிக்கையைச் சேர்த்து தாக்கல் செய்ய வாய்ப்பளித்த சிறப்புமிக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் பணிவான நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த காங்கேயம் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும், தேர்தலில் பணிபுரிந்த கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களுக்கும், திருப்பூர் மாவட்ட மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை ஈன்றெடுத்த மறைந்த என் தாய், தந்தையரையும் இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து வணங்கி, என்னுடைய பதிலுரையைத் துவங்குகிறேன்.

### முதல்வருக்கு நன்றி!

உலகத் தமிழ்ச் செம்மொழி முதல் மாநாடு, கோவையில் நடைபெற்றது. செம்மொழியாம் தமிழ்மொழிக்கு சிறப்பு செய்யும் வண்ணம் உலகத் தமிழ்ச் செம்மொழி முதல் மாநாட்டினை 2010 ஆம் ஆண்டு கோவையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது நடத்தினார்கள். தற்போது உலகத் தமிழ்ச் செம்மொழி இரண்டாவது மாநாடு 2025 ஆம் ஆண்டு சென்னையில் நடக்கும் என நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக தமிழ் வளர்ச்சித் துறையின் அமைச்சர் என்கிற முறையில் முதலில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் தன் சீர்மிகு பணித்திறனால் செம்மாந்த பணிகளை முன்னெடுத்து முனைப்புடன் செயலாற்றி வருகின்றது. இன்றைக்கு ஏறத்தாழ இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 3 ஆண்டு காலங்களில் தமிழ் வளர்ச்சித் துறையில் 67 அறிவிப்புகளை அறிவித்தது. அதே நேரத்தில் அறிவித்த அறிவிப்புகளில் 55 அறிவிப்புகளை நிறைவு செய்தும், 10 அறிவிப்புகள் சம்பந்தமாக மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அதேபோல 2 அறிவிப்புகள் கைவிடப்பட்டிருப்பதை இந்த நேரத்தில் பதிவு செய்துகொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அவ்வகையில் தமிழ் வளர்ச்சி இயக்ககம் வாயிலாக, தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாக, செம்மொழியாம் தமிழ் மொழி மேம்பாட்டுக்காக அகராதி உருவாக்குதல், தமிழ்க் கலைச் சொல்லாக்கம் உள்ளிட்ட சொல்புனைவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் இலக்கியம் மற்றும் சுவடியியல் புலம், தமிழ்மொழி மற்றும் மொழியியல் புலம், சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம், அயல்நாட்டுத் தமிழ்ப்புலம் வாயிலாக உயர் ஆய்வு நிறுவனமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

### ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம்!

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கலைப்புலம், சுவடிப்புலம், வளர்தமிழ்ப்புலம், மொழிப்புலம் போன்ற பல்வேறு துறைகள் வாயிலாக தமிழ்ப் பண்பாட்டின் வேர்களையும், விழுதுகளையும் மிகநுட்பமாக ஆய்வுச் செய்து வருகிறது. மதுரையில் உள்ள உலகத்தமிழ்ச் சங்கம் வாயிலாக உலகத் தமிழர்களையும், அமைப்புகளையும் ஒன்றிணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொழிப் பெயர்ப்புப் பிரிவு, தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் அரசின் நடவடிக்கைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கும் பணிகளை செம்மையாக செய்து வருகிறது. இவ்வகையில் எண்ணற்ற திட்டங்களை திறம்படச் செய்து முடிக்கின்ற வல்லமையுடன் தமிழ் வளர்ச்சித்துறை திகழ்கிறது. ஆட்சிமொழி திட்டச் செயலாக்கத்தை கண்ணும் கருத்துமாக தமிழ் வளர்ச்சித்துறை செய்து வருகிறது. ஆட்சிமொழிச் சட்ட வாரம், ஆட்சி மொழித் திட்டப் பயிற்சி, வணிக நிறுவனங்களில் பெயர்ப் பலகைகளில் முதன்மையாக தமிழை நிலை நிறுத்துவது, தமிழ் அறிஞர்களுக்கும், எல்லைக் காவலர்களுக்கும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கும் உதவிடும் வகையில் உதவித்தொகை வழங்குதல், சங்கத்தமிழ் புலவர்களின் நினைவுத் தூண்களுக்கும், தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கும் மாலை அணிவித்துச் சிறப்பு செய்தல், சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குதல், மாணவர்களின் தமிழ் இலக்கியத் திறனை வளர்க்கும் வகையில் இளந்தமிழர் இலக்கியப் பயிற்சிப் பட்டறை, இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறை, தமிழால் முடியும் வாழ்க்கை வழிக்காட்டி பயிற்சி, தமிழ்த் திறனறிவுத் தேர்வு என்பவை போன்ற அருந்திட்டங்கள், சாகித்ய அகாடமி/முத்தமிழறிஞர் கலைஞர் செம்மொழி தமிழ் விருது பெற்ற அறிஞர்கள் பயன்பெறும் வகையில் கனவு இல்லத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுவோரின் பணிக்கு அணி சேர்க்கும் வண்ணம் எண்ணற்ற விருதுகள் வழங்கி செயலாற்றிக் கொண்டிருக்கிறது. மேலும் கடந்த நிதியாண்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், அதாவது 2022-2023 ஆம் ஆண்டிற்கான “இலக்கிய மாமணி விருது” வழங்கப்பட்டுள்ளது. கனவு இல்லத் திட்டத்தில் 10 தமிழ் அறிஞர்களுக்கு இல்லம் வழங்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் திருவள்ளுவலர் பிறந்த நாளான்று, அய்யன் திருவள்ளுவர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, தமிழ்த் தென்றல் திரு. வி.க. விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, கி.ஆ.பெ. விசுவநாதம் விருது, பெருந்தலைவர் காமராசர் விருது உள்ளிட்ட 7 விருதுகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழறிஞர்களுக்கு வழங்கப்பட்டது.

இளையோர் இலக்கியப் பயிற்சிப் பாசறையின் முதல் நிகழ்ச்சியை சென்னையில் தொடங்கி வைத்தோம். 2022 ஆம் ஆண்டிற்கான 'சிறந்த தமிழ் உச்சரிப்பு விருது' 4 ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 'தமிழ்நாடு நாள்' விழாவில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான 'முதலமைச்சர் கணினித் தமிழ் விருதுகள்' வழங்கினோம். அயலகத் தமிழர் திருநாளில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான 'உலகத் தமிழ்ச்சங்க விருதுகள்' வழங்கியுள்ளோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, தமிழ்நாட்டில் வாழும் 275 தமிழறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையில், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000/- வீதம் உதவித் தொகை வழங்கியுள்ளோம். சிறந்த நூல் பரிசுத் திட்டத்தின்கீழ் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குத் தெரிவு செய்யப்பெற்ற



66 நூலாசிரியர்கள் மற்றும் 66 பதிப்பகத்தார்களுக்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கியுள்ளோம்.

### 63 வகையான விருதுகள்!

விருதுகளைப் பொறுத்தவரையில், தமிழ்ச்செம்மல் விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது, தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, சொல்லின்செல்வர் விருது, உமறுப்புலவர் விருது, ஜி.யு. போப் விருது, இளங்கோவடிகள் விருது, சிங்காரவேலர் விருது, அயோத்திதாசப் பண்டிதர் விருது உள்ளிட்ட 63 வகையான விருதுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகையை மாற்றி, அதுகுறித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு, சென்னை, மயிலாப்பூர்-மந்தைவெளி அனைத்து வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ் வளர்ச்சித் துறையும், தொழிலாளர் நலத் துறையும் இணைந்து சென்னையில் நடத்திய விழிப்புணர்வுப் பேரணியில், நானும், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு, விழிப்புணர்வை ஏற்படுத்தினோம். அதற்கு வணிகர்களும் ஒத்துழைப்புத் தந்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், படிப்படியாக தமிழுக்கு முன்னுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழ் வளர்ச்சித் துறையும், தொழிலாளர் நலத் துறையும் உறுதியாக எடுத்துக்கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கட்டப்பட்ட மாமன்னன் இராசராசச் சோழன் பன்னோக்குக் கூடம், உள்விளையாட்டு அரங்கம், கூடுதல் மகளிர் விடுதி, பழைய ஆடவர் விடுதி முதல் தளம் மற்றும் 'குறளோவியம்' என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஒலி-ஒளிப் பதிவுக்கூடம் ஆகியவற்றைத் திறந்து வைத்துள்ளோம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட பழந்தமிழர் இலக்கியங்களின் ஒலி நூல்கள் மற்றும் கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புவெளி நூல் ஆகியவற்றை வெளியிட்டுள்ளோம். துறையின் உதவி இயக்குநர் பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட அறிவியல் தமிழ் மன்றத்தை புத்தாக்கம் செய்து, புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழ் வளர்ச்சித் துறையால் மலர் வணக்கம் செய்யப்படும் 11 தமிழறிஞர்களின் திருவுருவச் சிலைகளுக்கு விரைவுத் துலங்கல் குறியீடு (QR CODE) மற்றும் 360 டிகிரி முப்பரிமாண காட்சிக்கான வசதிகள் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ் வளர்ச்சித் துறை தற்போது பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது. முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு புதிய அறிவிப்புகளை வெளியிடுவதற்கு ஆணை வழங்கியிருக்கிறார்கள். அந்த புதிய அறிவிப்புகளை இங்கே வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

### அறிவிப்புகள்
### தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

1) கடந்த காலங்களில் பிறமொழித் திணிப்பால் தாய்மொழி தமிழுக்கு வந்த ஆபத்தை எதிர்த்து தங்கள் இன்னுயிரை ஈந்த மொழிதீரர்களின் தியாகத்தைப் போற்றும்வண்ணம் வரும் 2025 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரித் திங்கள் 25 ஆம் நாளினை “தமிழ்மொழித் தியாகிகள் நாளாக” கடைபிடித்து சென்னையில் உள்ள நினைவகங்களில் வீரவணக்கம் செலுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியால் அவரின் வேண்டுகோளை ஏற்று டாக்டர் மன்மோகன்சிங் தலைமையிலான அரசு 12-10-2004 அன்று தமிழைச் செம்மொழியாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையில் முதன்முறையாக 2010 ஆம் ஆண்டு உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு தமிழின மக்களின் விழாவாகக் கோவையில் சிறப்பாக நடத்தப்பெற்றது. தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுதந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமையைப் போற்றிடும் வகையில், அவர் பிறந்த நாளான ஜூன் திங்கள் 3 ஆம் நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் “செம்மொழிநாள் விழா” வாகக் கொண்டாடப்படும். மேலும், செம்மொழியின் சிறப்பையும், முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டின் பெருமையை மாணவர்களிடம் உணர்த்திடும் வகையிலும் ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்புப் பயிலும் பள்ளி மாணவர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை வாயிலாகவும், கல்லூரி மாணவர்களுக்குக் கல்லூரிக் கல்வி இயக்ககம் வாயிலாகவும், செம்மொழித் தமிழ் தொடர்பில் வரையறுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்தப்படும். தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்பெறும் விழாச் செலவினம் மற்றும் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கிட ரூபாய் 1 கோடியே 88 இலட்சத்து 57 ஆயிரம் ஆண்டுதோறும் வழங்கப்படும்.

3) முனைவர் ஆறு. அழகப்பன், முனைவர் இராமலிங்கம் (எ) எழில் முதல்வன் மற்றும் நினைவில் வாழும் தமிழறிஞர்களான முனைவர் சோ. சத்தியசீலன், முனைவர் மா.ரா. அரசு, பாவலர் ச. பாலசுந்தரம், முனைவர் க.ப. அறவாணன், முனைவர் க.த. திருநாவுக்கரசு, முனைவர் இரா. குமரவேலன், கவிஞர் கா. வேழவேந்தன் ஆகியோரின் நூல்கள் ரூபாய் 91 இலட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் நாட்டுடைமையாக்கப்படும்.

4) சிறந்த நூல்களுக்கான பரிசுத் திட்டம் வாயிலாக, 33 வகைபாடுகளில் சிறந்த நூல்களை எழுதிய நூலாசிரியர்கள் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2011 ஆம் ஆண்டு பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞரின் அடியொற்றி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, நூலாசிரியருக்கு ரூபாய் 30 ஆயிரத்திலிருந்து ரூபாய் 50 ஆயிரமாகவும், பதிப்பகத்தாருக்கு ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாகவும் பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்படும்.

5) பாவேந்தரால் எனக்குப் பிறகு கவிஞன் முடியரசன் என்று பாராட்டப்பட்டவரும் 'வளையா முடியரசர்', 'வணங்கா முடியரசர்' எனப் போற்றப்பட்டவருமான வீறுகவியரசர் முடியரசன் அவர்களின் புகழைப் போற்றும்வண்ணம் சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் திருவுருவச் சிலை நிறுவப்படும்.

6) தமிழினத் தலைவர் என்று தமிழ்நாடு மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள தமிழர்களால் அன்பாக அழைக்கப்படும் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையில் புதிய விருது ஆண்டுதோறும் வழங்கப்படும். முத்தமிழறிஞர் கலைஞர் அடியொற்றி தமிழுக்குத் தொண்டாற்றும் ஒருவருக்கு விருதுத் தொகை ரூபாய் 10 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், பொன்னாடை, தகுதியுரை ஆகியவை வழங்கிட ரூபாய் 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

7. சண்டிகர்வாழ் தமிழர்களின் இளந் தலைமுறையினர் தமிழ்மொழியின் சிறப்பினையும் கலைப் பண்பாட்டு விழுமியங்களையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, ஆடற்கலை, இசைக்கலை, தையற்கலை மற்றும் எழில் புனைவு உள்ளிட்ட நுண்கலைகளைப் பயிற்றுவிக்க ஏதுவாக சண்டிகர் தமிழ் மன்றக் கட்டட விரிவாக்கப் பணிகளுக்கு ரூபாய் 50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

8. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் தில்லித் தமிழ்ச் சங்கத்தில் 1997 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட திருவள்ளுவர் கலையரங்கத்தில் தில்லி வாழ் தமிழர்களின் வழித் தோன்றல்கள் பயனுறும் வண்ணம் தமிழ் மொழிப் பயிற்சி, நடனம் மற்றும் இசை வகுப்புகள் நடத்துதல், தமிழ் சார்ந்த கலை, இலக்கிய நிகழ்ச்சிகள், தமிழிணையக் கருத்தரங்குகள் உள்ளிட்ட தமிழ்சார்ந்த நிகழ்வுகள் நடத்திட ஏதுவாக கலையரங்கத்தினைப் புனரமைத்திட தில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு ரூபாய் 50 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்.

பேரவைத் தலைவர் அவர்களே, செய்தித் துறை மானியக் கோரிக்கையின் பதிலுரைக்கு வருகிறேன்.

“இன்றைய தினத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நேற்றைய தினத்தை நீங்கள் ஆராய வேண்டும்” என்று ஒரு பொன்மொழி உண்டு. இந்தப் பொன்மொழிக்கு வடிவமாக, எடுத்துக்காட்டாக, செய்தி மக்கள் தொடர்புத் துறையே திகழ்கின்றது.

தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளையும் மக்கள் நலனுக்கான திட்டங்களையும் நாள்தோறும் சரியான முறையில் மக்களின் பார்வைக்கு விரைந்து கொண்டு சேர்ப்பதில் வல்லமையுடன் செயல்படுகின்றது செய்தி மக்கள் தொடர்புத் துறை.

**“விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின்”**

என்பார் திருவள்ளுவப் பெருந்தகை.

“வகைப்படுத்தியும் சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்” என்று இக்குறளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் நுட்பமாக உரை எழுதியிருப்பார். அதற்கு இலக்கணமாக செய்தி மக்கள் தொடர்புத் துறை விளங்கி வருகின்றது.

ஏறத்தாழ 3 ஆண்டுக் காலமாக இந்த அரசு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் 85 அறிவிப்புகளை வெளியிட்டிருக்கின்றது. இதுவரை 56 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. 28 அறிவிப்புகள் நடைமுறையில் முன்னேற்றமான பணியில் இருக்கின்றன. ஒரு அறிவிப்பு மட்டும் அங்கே இடப் பிரச்சினை காரணமாக, வேலூர் மாநகராட்சியில் அமைந்துள்ள அண்ணா பல்நோக்கு கலையரங்கம் தொல்லியியல் துறையின் சார்பில் தடுக்கப்பட்ட காரணத்தினால் அதனை நிறைவேற்ற முடியாததால், அது கைவிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) தொல்லியியல் துறையால் தடுக்கப்பட்டிருக்கிறது.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் 88 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், 2 நினைவுச் சின்னங்கள், 1 நினைவு வளைவு ஆகியவை சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டும், பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னையில் சமீபத்தில் முத்தமிழறிஞர் ஐயா அவர்களுடைய நினைவிடம் திறந்து வைக்கப்பட்டதோடு பல்வேறு இடங்களில் அரங்குகளும், நினைவு தூண்களும், அதேபோல் சிலைகளும் இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. அனைத்தையும் படித்தால் கால நேரம் அதிகமாகும் என்பதால், அதனை தலைப்பு செய்தியாக மட்டும் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதை நான் படித்ததாகக் கருதி பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் அமைச்சர் மக்களால் “பேராசிரியர்” என்று அழைக்கப்படும் பேராசிரியர் அன்பழகனார் அவர்களுக்கும், மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் அவர்களுக்கும், வங்கக் கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களுக்கும், முன்னாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களுக்கும், சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் ஆகியோரின் திருவுருவச் சிலைகளையும், திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன்கூடிய மணி மண்டபத்தையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இதனைத் தொடந்து, கோயம்புத்தூர் வ.உ. சிதம்பரனார் பூங்காவில், வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கும், கடலூரில் சுதந்திரப் போராட்ட வீராங்களை அஞ்சலை அம்மாள் அவர்களுக்கும், மயிலாடுதுறையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கும், புதுக்கோட்டையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்கும், மதுரை மாநகரில் பிரபல பின்னணிப் பாடகர் டி.எம். சௌந்திரராஜன் அவர்களுக்கும், வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் தியாகி அண்ணல் தங்கோ ஆகியோரின்திருவுருவச்சிலைகளையும், நாமக்கல் நகரில் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு அன்னாரது நினைவு இல்லத்தில் மார்பளவு சிலையையும், தூத்துக்குடியில் ராவ்பகதூர் குரூஸ் பர்னாந்தீஸ் அவர்களுக்கு குவிமாடத்துடன்கூடிய திருவுருவச் சிலை, இராணிப்பேட்டையில் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கு குவிமாடத்துடன் கூடிய திருவுருவச் சிலை, தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில் வீரமாமுனிவருக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம், செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கத்தில் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம், திருச்சி மாநகரில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர், சர் ஏ.டி.பன்னீர்செல்வம், ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் ஆகியோர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபம், தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்கள் நினைவாக கட்டப்பட்டுள்ள மணி மண்டபத்தில், குதிரையில் அமர்ந்து போர் புரிவது போன்று கம்பீர தோற்றத்துடன்கூடிய புதிய சிலையையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் பெரியவர் இளைய பெருமாள் அவர்களுக்கு அரங்கம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் கிராமத்தில் முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் காத்திருப்பு அரங்கம், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இம்மானுவேல் சேகரனாருக்கு திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கம், விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் மேனாள் அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன்கூடிய அரங்கம், நாமக்கல் நகரில் சென்னை மாகாணத்தின் மேனாள் முதலமைச்சர் டாக்டர் ப. சுப்பராயன் அவர்களுக்கு அரங்கம், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டப் பணிகள் நடைபெற்றபோது ஏற்பட்ட விபத்தில் உயிர் நீத்தவர்களுக்கான நினைவு மண்டபமும், திட்டம் உருவாக காரணமானவர்களான பெருந்தலைவர் காமராசர், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் வி.கே. பழனிசாமி கவுண்டர், மேனாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், மேனாள் சட்டமன்ற உறுப்பினர் பொள்ளாட்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு பொள்ளாச்சியில் திருவுருவச் சிலைகள், விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 1987 ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான 21 சமூக நீதிப் போராளிகளுக்கு அரங்கம், தமிழில் முதல் நாவல் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு மயிலாடுதுறையில் அரங்கம், தமிழ் மொழி மீது தீராத பற்றுக் கொண்டு, இந்தித் திணிப்பினை எதிர்த்துப் போராடி முதன் முதலில் உயிர்த் தியாகம் செய்த கீழப்பழுவூர் சின்னச்சாமி அவர்களுக்கு அரியலூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் ஆகியவை நடைபெற்று வருகின்றன.

### விரைவில் திறக்கப்படவுள்ள திருவுருவச் சிலைகள் மற்றும் அரங்கங்கள்

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர் தளிபாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் அவர்களுக்கு திருவுருவச் சிலை-திருமூர்த்தி அணை அருகில் அன்னாரது பெயரில் அரங்கம், ஈரோடு மாவட்டம், பவானி சாகரில் உத்தமத் தியாகி ஐயா ஈஸ்வரன் அவர்களுக்கு திருவுருவச் சிலை மற்றும் அரங்கம், சிவகங்கையில் சுதந்திரப் போராட்ட வீராங்களை வீரமங்கை வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்ற வீராங்கனை குயிலி அவர்களுக்கு திருவுருவச் சிலை ஆகியவை திறக்க தயார் நிலையில் உள்ளது.

தற்போது பணிகள் நடைபெற்று வரும் அரங்கங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் சிவகங்கை மாவட்டம், சிராவயல் கிராமத்தில் சுதந்திர போராட்ட காலத்தில் காந்தியடிகள் - தோழர் ஜீவாவுடன் சந்தித்துப் பேசியதன் நினைவாக அங்கே அரங்கப் பணிகள் நடைபெற்று வருகிறது. அதோடு பல்வேறு பணிகள் இங்கே நடைபெற்று வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், கேரள மாநிலம், வைக்கத்தில் உள்ள பெரியார் நினைவிடம் நவீன முறையில் சீரமைக்கப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் நவீன முறையில் புனரமைக்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். பல்வேறு கட்டடங்கள், அரங்கங்கள் மற்றும் சிலைகள் விரைவில் திறக்கப்படவிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய்துகொள்கிறேன்.

**மின் சுவர்கள்.** அரசின் செய்திகள் மற்றும் திட்டங்கள் குறித்த விவரங்கள் உடனுக்குடன் பொதுமக்களைச் சென்றடையும் வகையில், முதற்கட்டமாக தமிழ்நாட்டில் உள்ள 10 மாநகராட்சி பேருந்து நிலையங்களில் மின் சுவர்கள் நிறுவப்படும் என முதலமைச்சர் அவர்களுடைய ஆணைக்கிணங்க அறிவித்தோம். அது முழுமையாக இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. படிப்படியாக மக்கள் தொகைக்கேற்ப, அந்த மின் சுவர் ஒவ்வொரு மாநகரிலும் அமைக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சென்னையில் 41 தலைவர்களுக்கும், பிற மாவட்டங்களில் 79 தலைவர்களுக்கும், என மொத்தம் 120 தலைவர்களுக்குப் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ள அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, 2024 ஆம் ஆண்டு முதல் சென்னையில் திராவிடப் பேரொளி பண்டிதர் அயோத்திதாசர் பிறந்த நாளான மே 20 ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏற்கெனவே சிலையும், அரங்கமும் அமைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்று தற்போது அறிவித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க ஆணையிட்டிருக்கின்றார்கள்.

தொடர்ச்சி 9 ஆம் பக்கம்

## சென்னை - காந்தி மண்டப வளாகத்தில் வீரமங்கை இராணி வேலு நாச்சியாருக்கு திருவுருவச் சிலை!

## தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை! சிறந்த நூலாசிரியர் - பதிப்பகத்தாருக்கு பரிசுத் தொகை!